சரவணபவ

# பீலபெல்ட்
# அருள்மிகு கல்யாணதிருமுருகன் கோவில்





## குகமயம்



முருகா! வேலுண்டு வினையில்லை! மயிலுண்டு பயமில்லை! முருகா!



# பங்குனி உத்தரம்

## 03.04.2015 வெள்ளிக்கிழமை

பங்குனி மாதம் வருகின்ற உத்தர நட்சத்திரம், பௌர்ணமியோடு சேர்ந்து கன்னி ராசியில் வருகின்ற நாள் பங்குனி உத்தரநாளாகச் சிறப்பு பெறுகின்றது. அன்று சிவன் கோவில்களிலும், முருகன் கோவில்களிலும் இந்நாள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

மதுரை மீனாட்சி அம்மனை சுந்தரேசப் பெருமான் திருமணம் புரிந்தது பங்குனி உத்தரத்திர நன் நாளிலே. முருகப் பெருமான் தெய்வானையை திருமணம் புரிந்ததும் அன்றே. முருகப் பெருமான் ஆண்டிக் கோலத்திலே பழனியிலே வந்தமர்ந்த இந் நாளிலே திருப்பழனி கோவிலிலே திருவிழா நடைபெறும்.

பெண்கள் கணவனுடைய துன்ப துயரங்கள் நீங்கவும் மாங்கல்யம் நிலைத்து நிற்கவும் இவ் விரதத்தை கைக்கொள்வார்கள். விவாகம் தடைப்பட்ட ஆண், பெண் இருவரும் இவ் விரதத்தை கடைப்பிடித்தால் தடைகள் நீங்கி விவாகம் கைகூடும். புத்திர பாக்கியம் வேண்டுபவர்கள் பங்குனி உத்தர விரதத்தை கைக் கொண்டால் நல்ல பலன் கிடைக்கும். இப்படியான ஒரு நன்னாள் 03.04.2015 **வெள்ளிக்கிழமை** வருவதனால் அன்று நாம் முருகனை வணங்கி பேரானந்தப் பெருவாழ்வு பெறுவோம்.

**காலை 10:30 மணிக்கு விசேட அபிஷேகமும்**
**மதியம் 12:00 மணிக்கு விசேட பூஜையும் அன்னதானமும்**
**மாலை 5:00 மணிக்கு பூஜையும் நடைபெறும்.**

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

நிர்வாகம், 27.03.2015, **Tel:** 0176 41 41 56 42, 0176 34 98 73 77
**Begaweg - 11, 33649 Bielefeld**